TAMIL NADU LEGISLATURE LIBRARY
8 MAR 1972
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1971 ஜூலை 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Visit of Italian Trade Team to Madras.

* 214 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any Italian Trade Team vtsited Madras about the 15th February, 1971;

(b) whether the State Government representatives met them; and

(c) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) & (ஈ) இந்த தூதுக்குழு சில தொழிற்சாலைகளை பார்வையிட்டது.

மேலும் மாதவரத்தில் உள்ள இந்திய இத்தாலிய கால் அணி நிறுவன ஆரம்ப விழாவிலும் கலந்து கொண்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்த இத்தாலிய தூதுக்குழு இந்தியாவிற்கு வந்தபோது அதனுடைய சிபார்சுகளை அறிந்து கொண்ட அமைச்சரவர்கள் வெளிநாடு செல்லும்போது அந்த தூதுக் குழுவைச் சந்திப்பாரா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்தத் தூதுக்குழு நம்முடைய நாட்டில் என்னென்ன தொழிற்சாலைகளை உருவாக்கலாம் என்று பார்ப்பதற்காக வந்திருந்தார்கள். ஒரு தனியார் துறையோடு ஒரு கூட்டுத் தொழிற்சாலையை மாதவரத்தில் அவர்கள் தொடங்கியிருக்கிறார்கள். தொடக்க விழாவில் பங்குபெற வந்த அவர்கள் சென்னையிலுள்ள சில தொழிற்சாலைகளையும் பார்த்துச் சென்றிருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இத்தாலிய தூதுக்குழு வந்த நேரத்தில், இந்திய நாட்டில் போர்ட்டபிள் டைப் ரைட்டர்கள் செய்யக்கூடிய தொழிற்சாலை இல்லை என்பதையும், அவர்களோடு சேர்ந்து ஒரு தொழிற்சாலை அமைத்தால் இந்தியாவில் நல்ல முறையில் செயல்படும் என்றும் அறிவித்தார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றி யாரிடம் அறிவித்தார்கள் எஃகிற தகவல் என்னிடம் இல்லை. அதுபற்றி அவர்கள் பேசியதைப்பற்றி கனம் உறுப்பினர் அவர்களிடம் தகவல் இருந்தால் அளிக்கலாம்.

* 215 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether footwear production is to be undertaken in this State under Indo-Italian auspices; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இந்திய அரசின் ஒப்புதல் பெற்று இத்தாலிய நாட்டு நிறுவனம் ஒன்றின் கூட்டுடன், தனியார் துறையில் இந்தோ-இத்தாலிய பாத அணி உற்பத்தி நிறுவனம் ஒன்று சென்னையில் பாத அணிகள் செய்வதை மேற்கொண்டுள்ள இந்நிறுவனத்தின் அங்கிகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 10 லட்சம்; செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 5.7 லட்சம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைக்கு விண்ணமங்கலத்திலுள்ள தொழிற்சாலையினுடைய தோல் பொருட்கள் பயன் படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டில் ஏராளமாக இதற்குரிய மூலப் பொருட்கள் கிடைக்கின்றன. நம்முடைய யூனிட்டிலிருந்துதான் கொடுக்கவேண்டும் என்று இல்லை. நம்முடைய யூனிட்டிலிருந்து வெளி நாட்டுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்வதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : செருப்பு, பூட்ஸ், போன்ற (ஃபுட்-வேர்) காலணிகள் செய்ய இந்தியாவிலேயே தனியார் துறையிலும் குடிசைத் தொழில்களிலும் பெரிய தொழிற்சாலைகளெல்லாம் இருக்கும்போது இம் மாதிரியாக இத்தாலியக் கம்பெனியோடு சேர்ந்து செய்ய வேண்டிய அவசியம் எப்படி வந்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைப்பற்றி நாம் பரிசீலித்தோம். நம்முடைய தமிழ்நாட்டில் ஏராளமான மூலப் பொருட்கள் இதற்காக இருக் கின்றன. ஆனால், வெளிநாட்டுக்கு நாம் ஏற்றுமதி செய்யும்போது அவர் களுக்குத் தேவையான டிசைன்கள், தரம் (க்வாலிடி) முதலியவை அமைய வேண்டும் என்ற காரணத்தால் அவர்களோடு இப்படிப்பட்ட கூட்டு முயற்சி எடுத்தால் நம்முடைய பொருட்கள் வெளிநாடுகளில் விற்பனை ஆவதற்கு ஏதுவாக இருக்கும். அவர்களுடைய தரம் (க்வாலிடி) எந்த அளவுக்குத் தேவை என்பதையும் முடிவு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தத் தொழிற்சாலை வெறும் பத்து லட்ச ரூபாய் மூலதனத்தோடு துவக்கப்படுவதால் சிறிய தொழிற்சாலையாகத்தான் இருக்கக்கூடும். வெளிநாட்டு ஏற்றுமதி நிலையையும் ஆராய்ந்து பெரிய தொழிற்சாலையாக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வேறுசில நாடுகளிலும் இதுபோன்ற தொழிற்சாலைகளை அமைக்க முன்வந்திருக்கிறார்கள். அந்த நாடுகளில் அந்தத்